DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR), TIRUCHIRAPPALLI.
**Spl.S.C. No.24/2024**
**P.W. 3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சரவணன் |
| Father's Name | : | திரு.அய்யாளம்மன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 44 |

(Accused 1 and 2 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் திருச்சி மண்ணச்சநல்லூர் கல் பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் தையல் தொழில் செய்து வருகிறேன். நான் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். இந்த வழக்கில் புகார் கொடுத்த மாணிக்கம் என்ற விஜயமாணிக்கம் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர் ஆவார். எதிரிகளை தெரியும். எதிரிகள் இருவரும் இந்து முத்துராஜா வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் என்று நான் வேலைக்கு சென்று விட்டேன். அ.சா.1 மாணிக்கத்தை எதிரிகள் தாக்கியதாக கேள்விப்பட்டேன். வேறு எதுவும் தெரியாது. காவல்துணை கண்காணிப்பாளர் என விசாரித்த போதும் நான் இதைத்தான் சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 154—ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை அரசு தரப்பில்**

காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போது கடந்த 24.1.2024 அன்று எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் எங்கள் தெருவில் வேகமாக சென்று தொடர்பாக ரவி மனைவி கல்பனா என்பவரின் வீட்டிற்கு வந்திருந்த மணி மகன் பிரபாகரன் மீது எதிரிகள் விரோதம் கொண்டு இருந்தார்கள் என்றும், அதன் பின்னிட்டு கடந்த 29.3.2024 ம் தேதி இரவு 7.00 மணியளவில் நானும் எங்கள் தெருவைச் சேர்ந்த இளையசந்திரன் மகன் பிரபுதேவா என்பவரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது, பிரபாகரன் அங்கு போன் பேசிக்கொண்டு இருந்தார் என்றும், அப்போது அங்கு வந்த எதிரிகள் இருவரும் பிரபாகரனுடன் தகராறு செய்தார்கள் என்றும், அவர் மாணிக்கத்திற்கு போன் மூலம் தகவல் சொன்னார் என்றும், எதிரிகள் இருவரும் மாணிக்கத்திடம் எங்களை கேள்வி கேட்கிற அளவுக்கு உனக்கு தைரியம் வந்து விட்டதா என்று அவரது சாதியின் பெயரைச் சொல்லி பொது இடத்தில் இழிவு படுத்தி அசிங்கமாக திட்டியும், முதல் எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் மாணிக்கத்தின் வலது கையில் குத்தி ரத்த காயத்தை ஏற்படுத்தினான் என்றும், இரண்டாவது எதிரி பிரகாஷ், சாட்சிகள் மாணிக்கம் மற்றும் பிரபாகரனை, பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விட்டான் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல .

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Web copy